1981 மார்ச் 2]

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 2, at the end after the word 'retrospectively' *add* the words, without adversely affecting the privileges of the employees in the latter case'.

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றுத் தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 2 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) நிறைவேற்றப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 3-3-1981 ஆம் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

213. சேரன் பொறியியல் கழகத்தின் (வரையறுக்கப்பட்டது) 1980 ஆம் ஆண்டிற்கான 7 ஆவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.